செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 233 நாள் : 21/4/17

பத்திரிக்கைச் செய்தி

செயல்முறை மின்னணுவியல் பயிலரங்கம்

வேலூர் மாவட்ட அறிவியல் மையத்தில் பள்ளி மாணவர்களுக்கான இரண்டு நாட்கள், "செயல்முறை மின்னணுவியல் பயிலரங்கம்" 7, 8 & 9 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு **11.05.2017** மற்றும் **12.05.2017** (வியாழன்,வெள்ளி) ஆகிய இரண்டு நாட்கள் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெறவுள்ளது.

மாவட்ட அறிவியல் மையம், தேசிய நெடுஞ்சாலை சத்துவாச்சாரி, வேலூர் –9, என்ற முகவரியில் தங்கள் பெயர்களை முன்பதிவு செய்யலாம். இந்த பயிற்சி முகாமில் மின்னணுவியலை அடிப்படையாகக்கொண்டு மாணவர்கள் தாங்களே சிறிய மின்னணுவியல் உபகரணங்களை தயார் செய்யும் விதத்தில் பயிற்சி அளிக்கப்படும், இந்த பயிற்சி மாணவர்களை ஊக்குவிக்கும் விதமாக அமையும்.

இந்த பயிற்சி வகுப்பில் பங்குபெறும் மாணவர்களுக்கு பயிற்சிப்பொருட்கள், சான்றிதழ்களுடன் மதியஉணவும் வழங்கப்படும். அவர்கள் தயார் செய்த சிறிய உபகரணங்கள் (Electronic Kit) மாணவர்களுக்கு தனித்தனியாக வழங்கப்படும்.

முன்பதிவு, முதலில் வரும் 35 மாணவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

பதிவு கட்டணமாக ரூ.700/– (ரூபாய் எழுநூறு மட்டும்) செலுத்தி **08.05.2017** அன்று மாலைக்குள் தங்கள் பெயரை பதிவு செய்து கொள்ளவும்.

மேலும் தகவலுக்கு கீழ்க்கண்ட தொலைபேசி எண்களை தொடர்பு கொள்ளவும்.

**0416 - 2253297, 0416 – 2252297.**

21/4/17
(ஜா.துரைராஜ் ஞானமுத்து)
மாவட்ட அறிவியல் அலுவலர்

செ.ம.தொ.அ
வேலூர் - 9.